<u>2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>**O.S.No.** 46/2015</u>

14.11.2025 பி.வா.சா.1 திரு. ராஜதுரை

(1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 28.04.2025 முதல் தலைமை உதவியாளராக பணி செய்து வருகிறேன். வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆவணங்கள் அடிப்படையில் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமான அனைத்து கோப்புகளும் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்துக்கள் தற்போது பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம் புல எண் 774/1, 778/1,5, 787/1, 788/2, 789/1ல் பூமி தான போர்டின் இடமாக உள்ளது. ஸ்தலத்தில் என்னவாக உள்ளது என்று எனக்கு தெரியாது. புல எண் 774/1, 778/1,5, 787/1, 788/2, 789/1ல் உள்ள சொத்துக்களை நான் நேரடியாக பார்வையிடவில்லை. எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு தகவல் கொடுத்தது நான் அல்ல என்றால் சரிதான இதற்கு முன்பு பணியாற்றிய அலுவலர் தகவல் அளித்தார். ( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>திருநெல்வேலி